பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

12 07 2025 **SATURDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- உற்பத்தித்துறையில் ஏற்பட்டுவரும் முன்னேற்றம் காரணமாக ஏராளமான புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- மத்திய அரசின் வேலைவாய்ப்பு முகாம் மூலம் ஒரே ஆண்டில் 10 லட்சத்திற்கும் அதிகமானோருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

- திமுக தலைமையிலான ஆட்சியில் அனைத்துத்துறைகளிலும் ஊழல் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

- தமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

மக்கள் தொகையிலும், ஜனநாயக நடைமுறையிலும் இந்தியா வலுவான நாடாக இருப்பதை உலக நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் மத்திய அரசு பணிகளுக்கு தேர்வான 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பணி நியமன ஆணைகளை காணொலி வாயிலாக அவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், தனியார் துறையில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார்.

உற்பத்தித்துறையில் விரைவான வளர்ச்சி கண்டுவருவதன்மூலம் ஏராளமான புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

உற்பத்தித்துறையை ஊக்குவிக்கும் வகையில், பட்ஜெட்டில் உற்பத்திக்கான இயக்கம் அறிவிக்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த பத்தாண்டுகளில் நாடு முழுவதும் 90 கோடிக்கும் அதிகமான மக்கள் அரசின் நலத்திட்டங்கள் மூலம் பயனடைந்து வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

வருவாய் மற்றும் நுகர்வு சமநிலையை பராமரிப்பதில் இந்தியா உலகின் முன்னணி நாடாக திகழ்கிறது என்று உலக வங்கி பாராட்டியுள்ளதை திரு நரேந்திர மோடி சுட்டிக்காட்டினார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் பங்கேற்று, பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

பிரதமர் அளித்த வாக்குறுதியின்படி ஒரே ஆண்டில் வேலைவாய்ப்பு முகாம் மூலம் இதுவரை பத்து லட்சத்திற்கும் அதிகமானோருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசின் நலத்திட்ட உதவிகள் பயனாளிகளின் வங்கிக்கணக்குகளில் நேரடியாக செலுத்தப்பட்டு வருவதாக டாக்டர் எல். முருகன் கூறினார்.

***(Voice Byte - எல். முருகன் - 50 Sec)***

மத்திய அரசின் வேலைவாய்ப்பு முகாம் மூலம், பணி நியமன ஆணையை பெற்றுள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று திருச்சியை சேர்ந்த இளைஞர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Voice Byte - இளைஞர் - 28 Sec)***

<<<<<>>>>>

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்-4 தேர்வு இன்று நடைபெற்றது.

மூவாயிரத்து தொள்ளாயிரத்து 35 காலிப்பணியிடங்களை பூர்த்தி செய்யும் வகையில் இத்தேர்வு நடைபெற்றது.

மாநிலம் முழுவதும் நடைபெற்ற இத்தேர்வை 13 லட்சத்திற்கும் அதிகமானோர் எழுதியுள்ளனர்.

இந்த தேர்வு முடிவுகள் 3 மாதத்திற்குள் வெளியிடப்படும் என்று பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் திரு பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டம் 2027-ஆம் ஆண்டு செயல்படுத்தப்படும் என்று இஸ்ரோ தலைவர் திரு நாராயணன் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

***(Voice Byte ’-`நாராயணன் - 49 Sec.)***

<<<<<>>>>>

திமுக தலைமையிலான ஆட்சியில் ஊழல் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

மதுரை மாநகராட்சியில் நடைபெற்ற 200 கோடி ரூபாய் ஊழல் முறைகேட்டை கண்டித்து பிஜேபி சார்பில் இன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், மாநில அரசின் தவறுகளை பொறுப்புணர்வுடன தேசிய ஜனநாயக கூட்டணி சுட்டிக்காட்டி வருவதாக கூறினார்.

திமுக தலைமையிலான ஆட்சியில் உள்ள தவறுகளை சுட்டிக்காட்ட அதன் கூட்டணி கட்சிகள் தயங்கி வருவதாக அவர் குறை கூறினார்.

தமிழக அரசின் செயல்பாடுகள் மீது மக்கள் அதிருப்தி கொண்டுள்ளதாகவும், இது வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் எதிரொலிக்கும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

***Sound Byte - ' செந்தாமரை கண்ணன் - 50 'Sec.)***

இதனிடையே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

ராமநாதபுரம் மாவட்டத்தில் மாநில அரசின் திட்ட முகாம்கள் வரும் 15-ஆம் தேதி முதல், செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திரு சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

--------------------

நாமக்கல் மாவட்டத்தில் வரும் 15-ஆம் தேதி முதல் நடைபெறும் முகாம்களில் பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

--------------

கன்னியாகுமரி கடல் பகுதியில் நீர்மட்டம் குறைந்துள்ளதால், விவேகானந்தர் மண்டபம், திருவள்ளுவர் சிலை மற்றும் கண்ணாடிப் பாலத்திற்கு செல்லும் சுற்றுலா படகு சேவை மறு அறிவிப்பு வரும் வரை நிறுத்தப்பட்டுள்ளது.

-----------

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் ரயில் மூலம் கடத்தி வரப்பட்ட 20 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டன.

----------------

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே பேருந்தில் கடத்தி வரப்பட்ட 25 கிலோ போதைப்பொருளை பறிமுதல் செய்த காவல்துறையினர் இதுதொடர்பாக 3 பேரை கைது செய்தனர்.

----------------

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலில் சிறப்பு செய்யும் திட்டத்தின்கீழ், மணிவிழா கண்ட தம்பதியினர் வரும் 25-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு கோவில் நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

மேட்ரிட்டில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் குழு பிரிவில் ஜோதி சுரேகா, **'Parneet Kaur, Prithika Pradeep,** ஆகியோர் வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றினர்.

கலப்பு குழு பிரிவில் ரிஷப் யாதவ், ஜோதி சுரேகா ஆகியோர் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

-------------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **'Prarthana Thombare '-** நெதர்லாந்தின் **'Arianne Hartono** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-----------

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை ---விக்கெட் இழப்பிற்கு ---ரன் எடுத்துள்ளது.

**Lords-**ல் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 387 ரன் எடுத்துள்ளது.

--------------

இந்தியா - இங்கிலாந்து இடையேயான 5-வது மற்றும் இறுதி மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

------------

**Beckenham**-ல் நடைபெற்றுவரும் இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை ----விக்கெட் இழப்பிற்கு --- ரன் எடுத்துள்ளது.

***<<<<<END>>>>>***